

மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் அருகில் முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவிடத்தில் பொதுப்பணி மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மற்றும் குடும்பத்தார் முன்னிலையில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

சாம்சங் : பிரச்சினைகளை ஊதி பெரிதுபடுத்துவதை தவிர்த்து

# தீர்வு காண முயற்சிக்க வேண்டும்!

## தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. வேண்டுகோள்!



சென்னை, அக். 14- சாம்சங் தொழிலாளர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்வதை விட்டு பிரச்சினைகளை ஊதி பெரிதுபடுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அதற்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்றும் சி.ஐ.டி.யு.க்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத போதும் கூட இடதுசாரிகளை ஆதரித்த ஓர் இயக்கம். நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சியில் போட்டியிட்ட அனந்த நம்பியாருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்களின் கருத்தை நிராகரித்து அவரை ஆதரித்த வரலாறு உண்டு.

அதேபோல் போக்குவரத்துக் கழகத்தில் உயர்நீதி மன்ற ஆணையின்படி ஒரே சங்கமாக இருக்க வேண்டுமென்ற தீர்ப்பின்படி 2010ல் நடைபெற்ற தேர்தலில் தொ.மு.ச. 57% சதவிகித வாக்குகளைப் பெற்று முதன்மைச் சங்கமாகத் தேர்வு செய்யப்பட்டது. அப்போது சி.ஐ.டி.யு. 14% வாக்குகள் மட்டுமே பெற்றது. ஆனால் இச்செய்தியை கேள்விப்பட்ட கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வேலூர் பொதுக்கூட்டத்தில் பேசும்போது சி.ஐ.டி.யு. தோல்வி குறித்து தன் வருத்தத்தை தெரிவித்திருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் சென்னை மற்றும் சென்னை சுற்று வட்டாரத்தில் உள்ள தொழிற்சாலைகளில் நடைபெற்ற போராட்டங்களில் இடதுசாரிகளை அழைத்துப் பேசி ஓர் இணக்கமான முடிவுகளை மேற்கொண்டது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

ஏன்? கடந்த 2006-2011 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் கூட ஹூண்டாய் நிறுவனத்தில் நடைபெற்ற போராட்டத்தில் தி.மு.க. அரசு சுமூகமாக பேசி போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. அந்தப் பிரச்சினையில் மறைந்த பேரவைத் தலைவர் அண்ணன் குப்புசாமி அவர்களும் நானும் அப்போது தொழிலாளர் துறை அமைச்சராக இருந்த தா.மோ.அன்பரசன் அவர்களும் எவ்வளவு முயற்சியில் ஈடுபட்டோம் என்பதை தொழிற்சங்க இயக்கங்கள் மறந்திருக்க முடியாது.

2001ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களான போக்குவரத்து, மின்வாரியம் மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போன்ற பொதுத்துறை நிறுவனங்களின் போனஸ் அறிவிப்பு அநீதியைக் கண்டித்து தன்னெழுச்சியாக 17 நாட்கள் நடைபெற்ற போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர நாம் அனைவரும் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில் நிபந்தனை ஏதுமின்றி வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றோம். அதன் விளைவாக பல தொழிலாளர்கள் பல்வேறு அடக்கு முறை, பணி நீக்கம், ஊதிய இழப்பு போன்றவற்றை எதிர்கொண்டோம். அப்போது நான் தந்த வாக்குறுதி அடிப்படையில் 2006ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு அமைந்தபோது பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணிக்கு எடுப்பது, வேலைநிறுத்த நாட்களை பணி நாளாகக் கருதி ஊதியம் வழங்குவது, தண்டனைகளை ரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை தி.மு.கழக அரசு செய்து தந்துள்ளது என்பது கடந்த கால வரலாறு.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு கொண்டு வந்த தீர்மானம் 1949 முதல் சங்கம் அமைக்கும் உரிமை 87, கூட்டுபேரம் எண்.98 ஆகிய தீர்மானங்கள் இந்தியா உட்பட ஏன் சீனாவில் கூட ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பது அனைவரும் அறிந்த உண்மை. இருப்பினும் தமிழ்நாட்டில் சங்கங்களைப் பதிவு செய்வதில் எந்த வித பாரபட்சமும் இல்லாமல் பதிவு செய்து கொடுப்பதும் பேச்சுவார்த்தைக்கு வராத நிர்வா கத்தை அழைத்து பேசுவதும் இதனால் பலன் அடைந்தது அதிகமாக சி.ஐ.டி.யு. சங்கம் தான் என்பதை மறந்து இந்த சாம்சங் பிரச்சினையை மிகவும் பெரிதுபடுத்தி அதனை முடிவுக்குக் கொண்டுவர இயலாத நிலை ஏற்படுவதை எங்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் தங்களுடைய வருத்தத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

இந்நிலையில் இந்தப் போராட்டம் சம்மந்தமாக நீங்கள் கொடுத்த அறிக்கையின்படி நாங்கள் அறிந்து கொள்வது சங்கத்தை பதிவு செய்ய தொழிலாளர் துறையில் கொடுத்து இருப்பதாகவும், அது காலதாமதமாகி உள்ளது. அதனால் தாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதாகவும் மற்றும் நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்து ஒரு தேக்க நிலையை உருவாக்கி தொழிலாளர் துறை பதிவு எண் வழங்கவில்லை என்று அரசின் மீது குறை சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? அனைத்து அமைச்சர்களும் நீங்கள் கேட்டுக் கொண்டபடி தீர்ப்பு வந்தவுடன் பதிவு எண் வழங்குவதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இது சாம்சங்குக்கு மட்டும் புதிதல்ல. State Bank of Indiaல் உள்ளவர்கள் தங்கள் சங்கத்தை பதிவு செய்தபோது SBI நிர்வாகம் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கின் இறுதியில் பதிவு எண் வழங்கலாம் என தீர்ப்பு கிடைத்த பின் அச்சங்கத்திற்கு பதிவு எண் வழங்கப்பட்டது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

ஒரு சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்றால் ஒரு சங்கம் பதிவு செய்து ஒரு ஆண்டு காலம் முடிந்தவுடன் அங்கீகாரம் கோரலாம். அப்படி நிர்வாகம் வழங்காவிட்டால் State Implementation of Evaluation State Implementation of Evaluation கமிட்டிக்கு விண்ணப்பித்து தங்களுடைய உறுப்பினர்களை நிரூபித்து அதன்படி அதிக உறுப்பினர்களை பெற்றிருந்தால் அரசு அச்சங்கத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அறிவுரை வழங்கலாம்.

ஆனால், இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி எந்தவொரு சங்கத்தையும் அங்கீகரிப்பதற்கான ஒரு சட்டம் தற்பொழுது இல்லை. அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். சட்டம் இல்லாதபோது சட்டப்படி அரசு நடக்கவில்லை என்று நீங்கள் குறை கூறுவதில் என்ன நியாயம் உள்ளது?

இந்தப் பிரச்சினை குறித்து முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஜூலை 7 ஆம் தேதி நான் டெல்லியில் இருந்து புறப்பட்டு வந்து உங்களோடு பேசி உங்கள் கோரிக்கைகளை தொழிலாளர் நல அமைச்சர் முன்பாக விவரித்து அதன் மீது தீர்வு காண்பதற்கு முயற்சிகள் தொடர்ந்து எடுத்து வருவதை மறந்திருக்கமாட்டீர்கள். அதன் பிறகு தொழிலாளர் துறையில் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் நிர்வாகம் ஒத்துக் கொள்ளவில்லை என்று நீங்கள் எடுத்துக் கூறிய பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறியது அரசு மேற்கொண்ட முயற்சி தொழிலாளர்களுக்கு ஆதரவான நிலைப்பாடு இல்லையா? அமைச்சர்கள் குழுவிடம் நீங்கள் தொழிற்சங்கப் பதிவு பிரச்சினை நீதிமன்றத் தீர்ப்பு வந்த பிறகு அந்த கோரிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டீர்கள். ஆனால் உங்கள் கோரிக்கை பட்டியலை தந்து இதன்படி நிர்வாகம் எங்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்கப்படவில்லையா? ஆனால் சாம்சங் நிர்வாகம் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் ஊதிய உயர்வு வழங்கி வருகின்றது. அதன்படி 1.4.2025க்குப் பிறகு தான் புதிய ஊதிய உயர்வு வழங்க முடியும் என்று நிர்வாகம் கூறி விட்டது. இந்நிலையில் அமைச்சர்கள் சாம்சங் நிர்வாகத்தை நிர்பந்தித்து இடைக்கால நிவாரணமாக ரூ.5000/ மற்றும் நீங்கள் வைத்த கோரிக்கைகள் சிலவற்றையும், வைக்காத சில கோரிக்கைகளையும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டுவிட்டதாக உங்களிடம் தெரிவித்தது தொழிலாளர் ஆதரவு நிலை யில்லையா? இவை அனைத்தையும் மறைத்து புதிய கோணத்தில் அரசை நிர்வாக ஆதரவு நிலை எடுப்பது போல் சித்தரித்து போராட்டத்தை பெரிதுபடுத்தி, இப்போது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பல சிக்கல்கள் மேலும் மேலும் உருவாகி வருகிறது. இதனால் சகோதர அமைப்புகளாக உள்ளவர்கள் எவ்வாறு நல்ல முடிவு எடுக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒன்றை நாங்கள் நினைவுபடுத்த விரும்புகின் றோம் நாங்களும் சங்கம் அமைத்து ஒசூரிலும் அம்பத்தூரிலும் பல தொழிற்சாலைகளில் போராடி வேலையிழந்து தொழிலாளர்கள் தவிப்பதும், அதற்கு தீர்வுகாண நடவடிக்கை கள் மேற்கொள்ள இயலாமல் இருப்பதையும் அனைவரும் அறிவார்கள். பல நிர்வாகங்கள் பெரும்பான்மை தொழிலாளர்களை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட தொழிலாளர்களை வைத்து ஒப்பந்தம் போட்டிருப்பது தமிழ் நாட்டிற்கு ஒன்றும் புதியது அல்ல. சாம்சங்கில் மட்டும் நடப்பதாக சித்தரித்து பெரிதுபடுத்துவது சரியல்ல.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லா முயற்சிகளும் மேற்கொண்டு வரும் சூழலில் அவரை தரம் தாழ்ந்து பேசுவதும், அவரை விமர்சிப்பதும் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சரியாக இருக்குமா என்பதை நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பிரச்சினையில் இளைஞர்கள், தொழிற்சங்கம் அனுபவம் இல்லாதவர்கள் உணர்ச்சி வசப்பட்டு போராட்டத்தில் இறங்கி விடுவது என்பது ஒன்றும் புதியது அல்ல. ஆனால் அனுபவம்மிக்க தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களி டம் இதனை எடுத்துக்கூறி இந்தப் போராட்டத்தை தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசு எல்லா நிலைகளிலும் தங்களுடைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு உறுதுணையாக தொ.மு.ச. பேரவையும் செயல்பட்டு வருகிறது. அந்த சூழலில் தாங்கள் பிரச்சினையை மேலும் பெரிதுபடுத்தாமல் ஓர் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தங்கள் அனுபவத்தை கொண்டு முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன் அறிமுகக் கூட்டம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்வில் சுந்தரமகாலிங்கம், செல்லப்பா,கென்னடி, தமிழ்ச்செல்வன்,கனிமொழி, ஷெரிப்,உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி திமுக இளைஞரணி சார்பில் துணை முதல்வர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி மதுரையில் மண்டல அளவிலான என் உயிரினும் மேலான எனும் தலைப்பில் நடைபெற்ற பேச்சு போட்டியில் ஒருங்கிணைப்பாளர் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி பி ராஜா தலைமை ஏற்க, தலைமை கழகப் பேச்சாளர் கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, நடுவர் வெ.மதிமாறன் ஆகியோர் முன்னிலையில் மாணவ மாணவியர் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட போது எடுத்த படம். உடன் மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மாவட்ட அமைப்பாளர்கள் சௌந்தர்ராஜன், விமல், இளங்கோ, கணேசன், ஹரிஹரசுதன், தனுஷ் குமார், செந்தில், கிருஷ்ணகுமார், ஆஜிப்கான், செல்வம் மற்றும் அனைத்து மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நேரில் வந்து பதிவு செய்ய முடியாது:

# பக்தர்களின் பாதுகாப்பு கருதியே ஆன்லைன் முன்பதிவு அமல்!

## கேரள அறநிலையத்துறை அமைச்சர் பேட்டி!

திருவனந்தபுரம், அக். 14 - பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே கட்டுப்பாடு இறுக்கப்பட்டு உள்ளது. சபரிமலை ஐயப்பனை தரிசிக்க ஆன்லைன் முன்பதிவு கட்டாயம் என்பதை தளர்த்த முடியாது என்று கேரள அறநிலையத் துறை அமைச்சர் வி.என். வாசவன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பனை தரிசிக்க வெளிமாநிலங்களில் இருந்து மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருந்தும் கூட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். ஐயப்பனை தரிசிக்க ஒரு மண்டலகாலம் விரதம் அனுசரிக்க வேண்டும். காலில் செருப்பு அணியக் கூடாது. அகரீதியாகவும் பத்தியம் இருக்க வேண்டும்.

இப்போது பக்கதர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் தேவசம் வாரியமும், கேரள அறநிலையத் துறையும் சில முடிவுகளை எடுத்துள்ளன.

கேரளாவின் சபரிமலை ஐயப்பன் கோயிலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சென்று மக்கள் சாமிதரிசனம் செய்கின்றனர். தொடர்ந்து கூட்டம் அதிகரித்த வண்ணம் இருந்த நிலையில், உடனடி தரிசனம் ஆன்லைன் பதிவு என இருமுறைகளில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு வந்தனர். இந்த இரு முறைகளையும் பயன்படுத்தப்பட்ட நிலையில், மண்டல மற்றும் மகரவிளக்கு சீசனின்போது 15 மணி நேரம் வரைதரிசனத்துக்காக பக்தர்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த ஆண்டு மண்டல பூஜை நேரத்தில் ஐயப்பனை தரிசனம் செய்ய முடியாமல் வீடு திரும்பினர். சமூக வலைத்தளங்களில் தேவசம் வாரிய நிர்வாகத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. தொடர்ந்து கூட்டநெரிசல் தொடர்பாக திருவிதாங்கூர் தேவசம் வாரிய தலைவ சாந்த் தலைமையில் உயர் மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நேரடி முன்பதிவு காரணமாக நாள்தோறும் 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குவிந்ததாகக் கூறி உடனடி தரிசன முறையை ரத்து செய்ய முடிவெடுக்கப்பட்டது. இனிசீசன்காலங்களில் ஆன் லைன் முன்பதிவு அடிப்படையில் ஒரு நாளைக்கு 80 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் எனவும் இதனால் நிலக்கல், பம்பை உள்ளிட்ட 10 இடங்களில் செயல்பட்டு வந்த உடனடி முன்பதிவு கவுன்டர்கள்மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மண்டல மகர விளக்கு பூஜைகளை முன்னிட்டு 3 மாதங்களுக்கு முன்னதாகவே ஆன்லைன் முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து கூட்டம் முடிந்ததும் தேவஸ்தான தலைவர் பிரசாந்த் அறிக்கையை வெளியிட்டார். அதில் இனி வரும் காலங்களில் பக்தர்கள் ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர் எனவும் உடனடி தரிசன முன்பதிவு முறை ரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பம்பை முதல் சன்னிதானம் வரைரோப்கார் அமைப்பது குறித்து ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விரிவான அறிக்கை, வரும் 23ம் தேதி உயர்நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் எனவும் நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் ரோப் கார் பணிகள் தொடங்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அப்பம், அரவணைக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்லவும், அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் சேவைக்கும் ரோப் கார் பயன்படுத்தப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் பதிவில்லாமல் சபரிமலைக்கு நேரடியாக வந்து முன்பதிவு செய்ய பக்தர்கள் எக்காரணம் கொண்டு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தேவசம் வாரியமும், அறநிலையத்துறையும் திட்டவட்டமாக அறிவித்துள்ளதற்கு எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. நேரடியாக வரும் பக்தர்களையும் ஐயப்பனை தரிசிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்க முடியாது என்று தேவசம் வாரியம் அறிவித்துவிட்டது.

இந்நிலையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த கேரள அறநிலையத்துறை அமைச்சர் வி.என்.வாசவன், "பக்தர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படக்கூடாது. கூட்ட நெரிசலில் சிக்கி திணறக்கூடாது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் அரசு திடமாக உள்ளது.

எனவே பக்தர்கள் அனைவரும் அரசின் முடிவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கறேன். ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்வதன் வாயிலாக நேர விரயத்தையும் குறைக்க முடியும். இது பக்தர்களுக்கு உகந்ததாக இருக்கும். எனவே இந்த புதியவிதிமுறையை அரசு தளர்த்தாது" என்று கூறினார்.

சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த தமிழர்கள் உள்பட

# 18 இந்தியர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை!

## தம்மாம் கிழக்கு மண்டலம் அயலக அணி வெங்கடேசன் – ஆரிஃப் மக்பூல் மேற்கொண்டனர்!

சவுதி, அக்.14- திமுக அயலக அணி சார்பில் (தம்மாம் கிழக்கு மண்டலம்) சவுதி அரேபியா சிக்கித் தவித்த தமிழர் உள்பட மொத்தம் 18 இந்தியர்கள் தாயகம் திரும்ப அனைத்து உதவிகளும் செய்து தரப்பட்டது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி பாதிக்கப்பட்டவர் பெயர்: முத்தையா தகப்பனார் பெயர்: சுப்பையா அறந்தாங்கி புதுக்கோட்டை மாவட்டம் முத்தையா கடந்த ஆறு வருட காலமாக வழக்கு காரணமாக தாயகம் திரும்ப முடியாமல் சிக்கித் தவித்து வந்தார்.

இதுபோல் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, உத்திர பிரதேஷ், பீகார், ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த 18 பேருக்கு பல்வேறு வழக்குகள் காரணமாக இந்தியாவுக்கு திரும்ப முடியாமல் இருந்தார்கள்.

இதனை தொடர்ந்து #NRTIA அயலக அணி மயிலாடுதுறை #வெங்கடேசன் துணை அமைப்பாளர் திருச்சி_ஆரிஃப்_மக்பூல் ஆகியோரை தொடர்பு கொண்டு இருவரும் இணைந்து தொழிலாளர் நீதிமன்றம் சென்று வழக்கு தொடர்ந்து சட்ட பூர்வமாக வழக்கை முடித்து வைத்தோம். ( Final Exit )இறுதிப் பயணச் சான்றிதழ் கிடைத்தது, ( Final Exit )இறுதிப் பயணச் சான்றிதழ் இரண்டு கட்டமாக வழங்கப்பட்டது.

சவுதி அரேபியா அரசாங்கம் அனைத்து உதவிகளும் பெற்று மற்றும் இந்திய தூதரகம் ரியாத் ஒத்துழைப்புடன் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டது.

NRTIA அனைத்து உதவிகளும் சட்டபூர்வமாக செய்து தாயகம் திரும்பி னார்கள் குடும்பத்தார்களும் முயற்சிகள் மேற்கொண்டனர்.

மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்புல், முகவை சீனி முஹம்மது, கமால் பாட்சா, NRTIA பொறுப்பாளர் பிரேம்நாத், தமிழ் சங்க தலைவர் சுரேஷ் பாரதி, அபூ ரயான், முஹம்மது ஃபாரூக், செட்டிநாடு மணிக்குமார், கிரிக்கெட் நூர், திருச்சி யூனுஸ் , ஜியான், பாரூக் ராஜா, மற்றும் அனைத்து நண்பர்களும் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையம் முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கேடஷன், துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மக்பூல், முகவை சீனி முஹம்மது,

தம்மாம் கிழக்கு மண்டல சவுதி அரேபியா, அயலக அணி துறையூர் கமால் பாட்ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த இந்தியர்கள்– தமிழர்கள் 18 பேர் தாயகம் திரும்ப தி.மு.க. அயலக அணி சார்பில் மயிலாடுதுறை வெங்கடேசன், ஆரிஃப் மக்பூல் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டு அனுப்பி வைத்தனர்.